259



1 APR 1924

உ

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி துணை.

இவை

எடப்பாடி கிராமத்தில்
திருக்கோவில் கொண்டெழுந்தருளிய

# ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி

பேரில்

மூவடுக்கு ஒலிக்குறி சந்த மகுடப்பதிகமும்
கும்பாபிஷேகச் சிந்தும்

அடங்கியிருக்கின்றன.

எடப்பாடி ரு. சின்னயிமாரி பக்தர்
ஷையூர் பூத்தாண்டி கலியப்பக்தர்
சின்னமணலி ஆ. மு. சி கைலாசயிருச பக்தர்
கவுண்டம்பட்டி அ. காவேட்டி வாத்தியார்
வெள்ளாண்டிவலசை கோ. அ. அங்கமுத்து பக்தர்
புதூர் கோ அ. பெருமாள் பக்தர்
ஷையூர் சே. சின்னாண்டி பக்தர்
இவர்கள் கேட்டுக்கொண்டபடி

மலையனூர் ஆலய ஸ்தானீகர்
மகா-ா-ா-ஸ்ரீ வீரப்ப வாத்தியார் குமாரன்
குமாரசாமி கவிஞ்சர் அவர்களால்

இயற்றப்பட்டு

சலம், செவ்வாய்ப்பேட்டை
அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது

1924 [அணா 2

Q25:417
N24
181828

## கேட்டுக்கொண்டவர் கருத்து.

சங்காழி ஏந்து முராஹரியின் தங்கை
சரித்திரத்தை ஆதியோ டந்தமாக
சிங்காரமாய்ப் பாடி தருவாயென்று
செப்பினார் சின்னையி மாரிபக்தர்
தங்காமல் முடி[illegible] பக்தர்
தயவு செய்யுமென்றார் [illegible] பக்தர்
அங்குமுத்து சீக்கிரம் ஆகட்டுமென்றார்
ஆதரித்தார் கோட்டை அ. பெருமாள் பக்தர்
எங்கேனும் போகாமல் சின்னத்தண்டி பக்தர்
இதுவேலை யாயிருந்து [illegible] கோர்த்தார்
வெங்காதல் வித்வான் குமாரசாமி
விளம்பினேன் பெரியோர்கள் உளம் கொள்வீரே.

894.8111
2766

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
181823
சென்னை 600 008

உ

ஸ்ரீ கணபதி துணை.

# ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி

## பேரில்

## மூவடுக்கு ஒலிக்குறி சந்த மகுட

# ஐதீகப் பதிகம்.

---

### விநாயகர் காப்பு வெண்பா.

பல்வள்ம்சூழ் யிடசநகர் பகவதியங் காளியெனும்
செல்வியின் மேல் நர்ப்பதிகம் செப்பவே—தொல்லைவினை
போக்கியருள் கண்ணுதலார் புத்திரனேநித்தியமும்
காக்குமத வாறணந்தாள் காப்பு.

அண்டர்கள் பரவுந்தாளை அன்பர்கள் போற்ற எண்ணி
வண்டது நுகரும் பூவால் வர்ச்சித்து வணங்குவார்யான்
தண்டமிழ் மாலையாக சரம் தொடுத்திருகை கூப்பி
தொண்டனும் பணிந்தேன் லோகதுரந்தரி எனையாள்வாயே.

### நூன்முகம்.

1. சத்தி சாமுண்டிநீ நித்திய கல்யாணிநீ
சமைய கோலாகலியும்நீ
சதுர்மறைக் கெட்டாத பரசமையக்காரணீ
சத்து சித்தானந்திநீ
சகல நிஷ்களவல்ல சச்சுதானந்திநீ
சர்வ தேவதையும் நீயே
சவ்வுமவ்வும் நீயே வாலைதிரிபுறையும்நீ
சாயூச்சிய மருள்வை நீயே

முத்திக்கு வித்துநீ மூவர்க்கும் தாயிநீ
முகுந்தனுக் கிளையவளும்நீ
முலையுண்ணாதவளும்நீ முலை தராதவளும்நீ
மூல முதலானவளும்நீ
முக்கோணத்துள்ளும்நீ முதலும்நீ கடையும்நீ
மோன தர்ப்பரையும் நீயே
முப்பாழ் கடந்தநீ சிர்ப்பரானந்திநீ
முப்புர மெறித்தவளும்நீ
வெத்தி வேலானநீ அத்வித புராதனி
வேத வேதாந்தி நீயே
விடமுண்ட கண்டர்க்கு மடமங்கையானநீ
விருபஞ்சாட்சரியும் நீ
விண்ணும்நீ மண்ணும்நீ கண்ணினுண் மணியும் நீ
விமலி பரஞ்சோதி நீயே
வெளியும்நீ ஒளியும்நீ ஐயும் கிலியும் சௌவ்வில்
விளையாடும் பார்வதியும்நீ
அத்தி முகனைப்பெற்ற உத்தமி யிடசகர்
அமர்ந்த பேரின்ப வடிவே
ஆனந்தி நாரணி அன்னை பரிபூரணி
அகில லோகக்காரணி
அந்தரி கௌமாரி சந்திர ஜடாதரி
அடிமை யெந்தனையாதரி
அம்பிகை முக்கண்ணியே செங்கண்மால் தங்கையே
அங்காளதேவி வுமையே.

2. திரைகட லுலகமோர் வுருண்டையின் வடிவாய்
திரண்டென அதிலென் தாய்நீ
சிரியகரு வுருவாகி பெருகிடவும் அது முத்தி
சிதைந்தண்ட பிண்டமாக
தேவிநீ ஐந்து முகமாகி மணிமந்திரமுடன்
ஜெனித்திச்சா சத்தி என்றே

தியங்கி பலரன்றியே மயங்கி தன்னுடன் வந்த
திறள்மணியி லொன்றை வீசி
குறைவிலா பலகோடி மாதரையுண்டாக்கியே
கோதை மகிழ்வெய்தி பின்னும்
குற்றமுற நாணம் கிஞ்சிற்றுமிலே யென்றெண்ணீ
கோதிலா மயேசன்றனை
கொஞ்ச வுருவாகிவற நெஞ்சமதிலெண்ணியே
குலவு மணிதனை யெறிந்தாள்
கோடிசூரியப் பிரகாசமாய் அய்யன் வுரு
கொண்டெழுந் தோசித்துடன்
பரபரப்புடன் வந்து படைத்தவள் தாயெனவும்
பாதமே பணிந்து நிற்க
பாவையும் வெகுண்டு அடாபாதகா என்னமதை
பாழ்படச்செய்தை எனவே
பரிவின்றி நெத்திக் கண்ணதை திறந்தழலெழ
பஸ்பமாய் எரித்துவுமையும்
பாரென்ற வடிவமாய் ஒருயுகம் கடந்துபின்
பகர்ஞான சத்தியாகி
அரைவடம் குலுங்கமணி யிடைசமாநகர் வந்து
அமர்ந்த பேரின்ப வடிவே
ஆனந்தி நாறணீ அீன்னே பரிபூறணீ
அகில லோகக்காறணீ
அந்தரி கௌமாரி சந்திர ஜடாதரி
அடுமை யெந்தனையாதரி
அம்பிகை முக்கண்ணியே செங்கண்மால் தங்கையே
அங்காளதேவி வுமையே.

3. மாராத எண்ணம் நிறைவேருமல் போச்சுதென
மாதேவி விசனமுற்று
மறுப்படி சதாசிவனை மண்ணின்மேல் வரவென்று
மங்கை ஒருமணி யெறிந்தாள்

மாயாவுதாரியே தாயே எனப்பணிய
மாதங்கி கோபமீறி
மனதுக் கிசையாமல் மாருபாடானதால்
மாய்த்து ஜலமாகி நின்ருள்
நாருயணி யொருயுகம் சென்றுமறுபடி
நர்க்கிரையா சுத்தியென்றே
நானிலமேலுரு கொண்டு எண்ணம் வீணுவதேன்
நாமரிந்திடுவ மென்றே
நம்பியொரு மணிவீசி பிர்மனைப் படைக்கவும்
நடிங்கியடி போற்றி நிற்க
நலமல்ல வென்று ருத்திரனையுண்டாக்கியும்
காணிட யெரித்து பின்னும்
யோரளமாய் வஞ்ச கபடநாடக சூஸ்த்திரன்
இணையிலாதவன் எந்தன்முன்
இட்க்ஷணம் வரவென்று யெரிந்தனள் மணியொன்றை
இதோ வந்தே னென்றெழுந்து
இங்குபல குவியலாய் சாம்பல்களிருப்பதேன்
யெனக் குரைத்திடுமென்ன
இதற்குமுன் நால்வரை எரித்தநீர் உம்மாலென்
இஷ்டம் நிறைவேரு மெனவே
ஆராதாநத்திலுரை அம்மணி யிடைசநகர்
அமர்ந்த பேரின்ப வடிவே
ஆநந்தி நாறணீ அன்னை பறிபூரணீ
அகில லோகக்காரணீ
அந்தரி கௌமாரி சந்திர ஜடாதரி
அடுமை யெந்தனை யாதரி
அம்பிகை முக்கண்ணியே செங்கண்மால் தங்கையே
அங்காளதேவி வுமையே.

4. இஷ்டம்பெறவெனில் மூந்தியெறித்த பேர்வழிகளை
யெழுப்பிடில் ஆமென்னவே

இச்சையது தீருமெதென மயேசன் சதாசிவநீங்க
இருவரை எழுப்ப அன்னை
யெழில்கண்ணன் சூதினால் தருவினதேன் தையலே
யென்றனர் ருத்திரமூர்த்தி
யெனக்கேற்ற மண்ணவநீ வுனக்குற்ற பாரிநான்
யெந்தனை ஆளுமெனவே
கஷ்டமிலை வுனதிஷ்டபடி நடந்திடவெனில்
கைகொண்ட சூலமோடு
கருதரிய நெற்றிக்கண் மணிமந்திர அவிழ்
தமிதை கன்னியே தருவையாகில்
கருத்துக் கிசைவனென புருஷனுசையினாலே
கபடமில்லாம லீய்ந்தாள்
கர்த்தன் பெற்றினிநம்மை பெற்ற தாயெனவெண்ணி
கடுகியே யெறித்தரன்றே
பொட்டென மாயவனோடி பிடியள்ளி மைத்துனு
பூவை என் தங்கை உமையை
பொருந்த யீந்தேனென ருத்திரனோர் பிடிதர
பொங்கி செந்திருவாகினள்
பூமனெனக்கேதுமிலை எனயேங்க நீயள்ளி
புகழ்நாவி லேத்துமென்ன
போதகலைவாணியாய் வந்திடக் கண்டெவரும்
பூரித்துக் கொண்டாடினர்
அஷ்டசித்திகளாகும் அம்மணி யிடைசநகர்
அமர்ந்த பேரின்ப வடிவே
ஆனந்திநாறணி அன்னை பரிபூரணீ
அகில லோகக்காரணி
அந்தரி கௌமாரி சந்திர ஜடாதரி
அடிமை எந்தனை ஆதரி
அம்பிகை முக்கண்ணியே செங்கண்மால் தங்கையே
அங்காளதேவி வுமையே.

5. தாயாகி யாவர்க்கும் தாரமாய் வந்திட்ட
தர்ப்பரியை தக்கநாரும்
தனது மகளாய்வர தபஞ்செய்ய யீஸ்பரி
தான் மகவாய் ஜெனிக்க
தாணுவுக்கதை யீந்து வேணவைபவம் பெற்று
தனதுளம் பூரித்து ஓர்நாள்
தன்மகளைக் பார்த்து வருவோமெனக்கைலைக்கு
தானேகி அறிவுக்கவும்
ஓயாது வரமுதவும் யீசனிக்கவலையால்
வுளம் கௌாததை யறிந்து
ஓ ஓ ஆண்டிக்கி இத்தனை கெர்வமா
ஒழிக்குரே னென்று யாகம்
ஊர் சென்று செயும் போதில் வுத்தமி கேட்டிதை
வோங்குமரன் பதம் வணங்கி
ஒன்றுக்குமுதவா என் தந்தை மகமதைதடுத்
தொரு நொடியில் வருவனென்ன
சேயாப் பிறந்தநாம் செப்பிடில் கேழ்ப்பனென
சித்தத்தில் எண்ணிடாதே
செல்ல வேண்டாமென கேளாது அன்னையும்
சென்றிட அவமதித்தான்
சீறிவெகு கோபமொடு பேய்வாழுஞ் சுடலையென
சிந்தவே சாபமீந்து
ஜெகமாதா அந்தயாகத்திலே வீழ்ந்து
சிதைந்தன அரன்வாடினர்
ஆயாவெனப்பணிய யிடைசமாநகர் வந்து
அமர்ந்த பேரின்ப வடிவே
ஆனந்தி நாரணி அன்னை பரிபூரணீ
அகில லோகக்காரணி
அந்தரி கௌமாரி சந்திர ஜடாதரி
அடுமை யெந்தனை யாதறி
அம்பிகை முக்கண்ணியே செங்கண்மால் தங்கையே
அங்காளதேவி வுமையே.

6. மருகுமா முனிபுத்திரன் பருவதநாருக்கு
மகவிலாக் குறைவினாலே
மாமகாமேரருகில் தபஞ் செய்ய வுமையவள்
மகிழ்ந்து மேனுவதியிட
மடிமீதில் வுருவாகி வீரிட்டழக்கண்டு
மங்கையும் எடுத்தணைக்க
மார்பில் பால் சுரந்தூட்டி மகிழ்வெய்தி அரனுக்கு
மணஞ்சூட்டி வாழும் நாளில்
பெருவாருதிக் கடைந்தமுதுண அரக்கர்கள்
பேதித்து வானவர்தமை
பெதரவாட்டிடவுண்ட தேவர் முனைந்திட அஞ்சி
பின்னிடைந்தக் கடலினில்
பேசாதொளிந்து நிசி காலத்திலதம் செய்ய
பிர்மன்மால் சிவனிடத்தில்
பேதையர்கள் முறையிட யெந்தனலாகாதுமால்
பேரனிடம் செல்லுமென்ன
நிருபனடியைப் போற்றி முறையிடக் கார்ப்பதாய்
நிகழ்திபின் குரையாதென
நெடியருக்கதர் பகல் ஆழியில் மகரமாய்
நிலைத்திறவில் தலைவைக்காமல்
நெட்டுரோர் இந்தவித கஷ்டம் தீர்த்தாளுமென
நெடிய முடிமன்னன் சோர்ந்து
நினையாதெல்லாம் நினைந்தென் செய்வதென்றேங்கி
நிந்தைக் காளானேனமென
அருசமையக்காரணி யிடைசமாநகர் வந்து
அமர்ந்த பேரின்பவடிவே
ஆனந்திநாரணி அன்னை பரிபூரணி
அகில லோகக்காரணி
அந்தரி கௌமாரி சந்திர ஜடாதரி
அடிமை யெந்தனை ஆதரி

அம்பிகை முக்கண்ணியே செங்கண்மால் தங்கையே
அங்காளதேவி வுமையே.

7. சருவா யுலர்ந்துபின் விஸ்வபிர்மனைக்கூவி
சண்டாளர் தமைவதைக்க
சாற்றிடீர் தக்கயோ சனையென்ன ஆண்டவா
சற்றுபொரு மென்றுபோற்றி
சதுர்மறையை படகாயும் அரன்அயன்மால் மூவரொடு
சகலதே வரையும்வலையாய்
சாருமெமன் பாசத்தை காலகயி றாக்கியும்
சத்திவெள் ளடியதாயும்
வருதில்லை மாகாளி சூலம்வுட் கயிறும்
வள்ளல்தாழ் வடமணியதாய்
வலதுகைக் கணையாழி தலைபஞ்சா ணகவும்
வண்டமே வலையதாயும்
வானமீன் கண்களாய் ஞானவலைக் கருகோடி
வருநூற்றி யிருபத்தைந்து
வண்துவாரங்களுள வலையதனை நிர்மித்து
வைத்தடி வணங்கி நிற்க
பருவதன் மகிழ்வெய்தி பரிசீர்ந்து அனைவருடன்
பார்க்கடல் சென்றுவீச
பாவிஅரக் கரைவாரி வாரிகரை ஓதரிட
பதைத்துமறு கடலொளித்தார்
பார்வேந்தன் காணுமல் எங்கென யாவரும்
பாய்ந்ததார்மரு கடலென்னவே
பகவதிகண் பாரெனக் கோரவுரு வாய்வந்து
பக்கல்நின் றஞ்சாதென
அருமறையில் விளையாடும் அன்னையே யிடைசநகர்
அமர்ந்தபே ரின்பவடிவே
ஆனந்திகாரணி அன்னைபரி பூறணீ
அகிலலோகக் காறணி

அந்தரி கௌமாரி சந்திர ஜடாதரி
அடுமை என் தனையாதரி
அம்பிகை முக்கண்ணியே செங்கண்மால் தங்கையே
அக்காளதேவி வுமையே.

8. மாதேவி வாய்திரந் தரக்கரை மெல்லுகையில்
மருகட லொளிந்த சூரர்
மஷ்டகோ ணன்புதல் வன்மீனரிஷி தவம்செய்யும்
மகானுவை சேர்ந்தோ மானுல்
மறணபய மில்லையென அங்குரை ந்திடக்கண்ட
மன்னனும் வீசிவாங்க
மகரிஷி தவங்கலைத தடியோ டெழுப்பிட
மாளாத சீற்றங்கொண்டு
யேதேதெனப் புதுமையிது வெனமுழித்திட
யெங்கினும் வழியில்லாது
இனிதலை பஞ்சான்வழி யாய்வந்து பார்த்தெதிர்
இருந்தமுடி வேந்தை நோக்கி
இங்கென்தவ மதுகெடச் செய்தசெம் படகநீ
யாரடா வென்ற சப்தம்
யீசன்முதல் அரிஅயன் தேவர்யாவ ருங்கேட்டு
யேகினார் மாயமாக
தீதேவந் துற்றதென அரசனும் மெய்சோர்ந்து
தேரியே வணங்கி நிற்க
தீயபாதகா சூரசம்மாரம் செய்துநீ
ஜீவனம் செயக்கடவது
தீனநீ போவென முடிதாழ்ந்து அய்யனே
தேவர்கட் காய்பரிந்து
தெரியாமல் வந்தயான் செய்பிழை பொருத்தருளும்
தேவாவென் றேயிரஞ்ச
ஆதேது தீராது அப்புரம் செல்லென
அம்மணி யிடசை நகர்வாழ்

ஆனந்தி நாரணி அன்னைபரி பூரணீ
அகில லோகக்காரணி
அந்தரி கௌமாரி சந்திர ஜடாதரி
அடிமை எந்தனை ஆதரி
அம்பிகை முக்கண்ணியே செங்கண்மால் தங்கையே
அங்காளதேவி வுமையே.

9. நிடதபுரிக் கிரைவனான் மருகுமா முனிபுத்திரன்
நெடியமால் தனது பேரன்
நீரணிப் பரமனிட மாமனார் உமை தந்தை
நேருபொன் னுலகுவேந்தன்
நேசிட்டபங்காளி தனதனொடு வருணனும்
நிலையான சம்மந்திகள்
நேயபரு வதன்பெயர் தேவர்படும் வாதையை
நீக்கினான் கார்க்கவந்தேன்
மடத்தனமாய் செய்தவிப் பிழைபொருத்தா ளென்று
மலர்ப்பதம் பணிந்து நிற்க
மாமண்டலாதிபா நானுமிதை யறியாது
மனக் கொதிப்பா லுரைத்தேன்
மாராது இதைத்தீர்க்க எந்தனாலாகாது
மரனிடஞ் செல்லு மென்ன
மன்னன்மதி முகம்வாடி கண்ணீர் ததும்பிட
மக்கடலில் வலையெரிந்து
விடமுண்ட கண்டனே சதிவந்து நேர்ந்ததே
விட்டுவந் திடலாகுமோ
வெம்புலிபோல் மீனரிஷி சூரசம் மாரம் செய
வீறிடச் சாபமீந்தார்
வெகுநாளின் வஞ்சமோ வுமக்கும் கல்நெஞ்சமோ
விதுவேளை யாளுமெனவே
வேந்தே முத்தேவரையும் சாபமிது விட்டதில்லை
விஜனமக கற்றுமென்ன

அடமாக திரும்வழி கூருமென யிடசைநகர்
அமர்ந்த பேரின்ப வடிவே
ஆனந்தி நாரணி அன்னைபரி பூரணீ
அகிலலோலக் காரணி
அந்தரி கௌமாரி சந்திர ஜடாதரி
அடிமை எந்தனை ஆதரி
அம்பிகை முக்கண்ணியே செங்கண்மால் தங்கையே
அங்காளதேவி வுமையே.

10. இந்தவித சாபமது வுந்தனைச் சாராமல்
யேற்றமை நாகன்மக்கள்
இனியதொண் ணூற்ருரு பேர்களும் பிரசந்திடுவர்
யிவர்க்கிதுவும் சேருமென்ன
யென்னையவர் வசைபேச ஜென்மமெடுத் தேனென
யேக்கமுற்றிட யீசனும்
யெனதுபொன் மலையாகும் திருவருணை முடிமீதில்
யேறறவீர் தீபமென்ன
சந்திரசேகரா யென்போல் முடிதாங்கி யாளாமல்
சாலவூ ழியர்கள்தானே
சரியல்ல வென்னஅரன் கார்த்திகை மாதத்தில்
சகலர் அரோ கரவென்றினி
சாற்றுபலன் யாவையும் வுமக்கே யளித்தனன்
சம்மதித்தா ளேவென
சர்ச்ஜனப் பரிபாலன் வுளம்களித் துமையவளை
சார்ந்துமுறை யிடவிதங்கி
தந்தையே அஞ்சாதே பிர்மகபா லத்தினில்
தான்போட பாபமில்லை
தாரணியில் மறுஜென்மம் மில்லைபய மில்லையாண்
தாளாதகுறை செய்யினும்
தத்வகுல பக்தரை கோடிதலை மறைவரை
தர்க்காப்பேன் குலதெய்வமாம்

தாழ்வாக யெந்தன்சொல் தவருமென் றெண்ணாதே
தானுவரன் பதசாக்ஷியே
அந்தநல் திடம்சொல்லி யிடசமா நகர்வந்து
அமர்ந்தபே ரின்பவடிவே
ஆனந்தி நாரணி அக்னிபரி பூரணி
அகிலலோகக் காரணி
அந்தரி கௌமாரி சந்திர ஜடாதரி
அடுமைஎந் தனையாதரி
அம்பிகை முக்கண்ணியே செங்கண்மால் தங்கையே
அங்காளதேவி வுமையே.

1·1 நெடியமா முடிமன்னன் வைகுந்த வாசன்முன்
நின்றுகண் ணீர்சிதறவே
நெஞ்சமும் குளிர்ந்ததோ மீனரிஷி சாபத்தில்
நேர்ந்துநான் வாடலாமோ
நீக்கியெனை யிதுவேளை காக்கண்ணிலை யோவென
நேசஅரவணை கேசவன்
நீயிதர்க்கஞ்சாதே அல்லல்வரு வேளைஎனை
நினைந்திடில் நிர்த்தூளியே
படியிலென் சுசரிதம் வுந்தன்கை வலையதில்
பாவியரக் கரைபிடித்து
பன்னரியபிர்ம கபாலப் பிரதிசெய்திடில்
பாபமே சாராதுமை
பக்தராய் பேர்கொண்ட தத்வகுல முழுவதும்
பாதுநான் கார்ப்பேனென
பருவதன் மகிழ்கொண்டு முன்போல முடிபூண்டு
பாருலகை யாளுப் நாளில்
கெடிகொள் மைனசனுக் கலியாணம் செயவெண்ணி
கீர்த்திசௌ மன்யரிஷிபின்
கன்னியகுமார்த்தியாம் சண்பகாவதியெனும்
கிளிமொழியை மாலைசூட்ட

கெம்பீர மாய்மக்கள் தொண்ணூத்தி ஆருபேர்
கேசவன் போல்பிரக்க
கிட்டி கலிவந்திட இட்டசா பமுநேர
செவுரவ மெலாம் விடுத்து
அடியவர்கள் வலைவீசி ஜீவிக்க நேர்ந்ததே
அப்மணி யிடகைநகர்வாழ்
ஆனந்தி நாரணீ அன்னை பரிபூறணீ
அகில லோகக்காறணீ
அந்தரி கௌமாரி சந்திர ஜடாதரி
அடுஊம யெந்தனை ஆதரி
அம்பிகை முக்கண்ணியே செங்கண்மால் தங்கையே
அங்காளதேவி வுமையே.

## வாழி விருத்தம்.

---

வாரண முகவன் வல்லபை வேலன்
வள்ளி தெய்வானையும் வாழி
வாணியும் பிர்மன் அரனும் பார்வதியும்
வானவர் கதிர்மதி வாழி
நாரணன்வாழி அன்னை லக்ஷிமியும்
நல்லசீர் பாவாடை வாழி
நம்பியவீர பத்திரன் மாகாளி
நற்குல பருவதன் வாழி
காரணமாக பாடவே சொன்ன
கயிலாச யிருசப்பன் வாழி
கருதா சின்னயிமாரி காவேட்டி
கருள் அங்க முத்தமே வாழி
பூரணமனம்தான் பெருமாளு பக்தர்
புவிபுகழ் சின்னாண்டி வாழி
புகன்றிடும் குமரசாமியும் வாழி
பொர்க்கொடி யங்காளி வாழியவே.

## மங்களம்.

மங்களம் மதமுகர்க்கும் மங்களம் வேலனுக்கும்
மங்களம் அரியரர்க்கும் மங்களம் கலைவாணிக்கும்
மங்களம் அங்காளியர்க்கும் மங்களம் பர்வதர்க்கும்
மங்களம் ஆயர்பாடி மங்களம் பக்தருக்கும்
மங்களம் குமரசாமி வரைந்த இப்பதிகமென்றும்
மங்களமாக பூவில் மங்களமாக மாதோ. மங்களம்

## தெம்மாங்கு.

1. அம்புஜமே இடசைநகர் அங்காள யீஸ்வரிக்கு
கும்பாபிஷேகம்செய்ய கோதையேநாம் போய்வருவோம்
அடியே—கோவில்சுத்தி வலம்வருவோம்
கோவிந்தன் தங்கை பதம்பணிவோம்
ஆவலுள்ள வரம்பெருவோம்
அன்னமே திரும்பி வீடுவருவோம்—அடியே
ஆசைக்கினிய அமர்தவசனி
பேசிடாமலென் பிரகேவருவாய். (நன்னனே)

2. ஆசையுள்ள தேசிகனே அடிக்கடிநீர் எடப்பாடி
நேசரிடம் போரீரிந்த நேரிழையாள் வரவொண்ணாதோ.
நெடுநாளாய்வர எண்ணமாகுது
நேரில் சொல்லவும் பயமிருக்குது
கடவுளருளால் லெட்டர்வந்தது
கன்னியெனைவர யெழுதிருக்குது—மன்னா
கருத்தரியாமல் கலங்குகின்றேனே
வருத்தமில்லாமல் வழுத்துவீர்தானே. (நன்னனே)

3. அன்னமே சிநேகரிடம் அடிக்கடிநான் போகநேரும்
வுன்னையப்போ கூட்டிச்செல்ல உத்தமியே கூடுமோடி
ஊரில்தேரு திருவிழாவல்ல
உரவின்முறையார் கூட்டமல்ல
பாரில்கலி யாணமல்ல
பண்டிகைக் கொண்டாட்டமல்ல—அடியே
பாவையேயிந்த காலம்போனால்
ஆவலாய்கண்டு அழைப்பார் நம்மையே. [நன்]

4. வைபோக மானஜெனம் வந்திருப்பா ரிந்தவேளை
தையலுந்தன் சிநேகிதரை தரிசிக்க தருணமிதுவே.
தனித்து எப்போநான் பார்க்கப்போறேன்
தங்களுடனே நானும் வாரேன்
எனைவிட்டுப் போனால் கவலைதீரேன்
இஷ்டம் இனிமேல் பதிலுங்கூறேன்—நாதா
யேதுபெந்தன் மீது வாது
காதல் கொண்டேன் பதிலே ஓது. [நன்]

5. கோதையரே இந்தவேளை குடும்பசகித மாய்வரவே
காதலோடு சிநேகர்முன்னம் கடிதம் வரைந்தார் போய்வருவோம்
கட்டுசாதம் கட்டிக்கொள்ளடி
கடிகி செலவுக் கெடுத்துக்கொள்ளடி
பொட்டியைத்திறந்து நகையைப்போடடி
புறப்பட்டு என் பின்னேவாடி—அடியே
பொற்கொடி சாதே போய்வர கோதே
இப்படிமாதே இணைபிரியாதே. (நன்)

6. வழியிலுள்ள அதிசயத்தை வஞ்சி யெனக்குக்காட்டி
மொழியவேணும் விபரமதாய் முன்பின்னிதை கண்டதில்லை
முற்றும் கள்ளி என்றெண்ணாதே
மோசவஞ்சனை நீ பண்ணாதே
குற்றமில்லை நீ யிப்போதே
கூறினாலே குறைவுறாதே—சுவாமி
கோதையென்மேல் தயவுவந்ததோ
கோபங்கொண்டிடில் இதுவும் நல்லதோ. [நன்]

... அவனக் காப்பக நூலக ...

7. மங்கையரே திருவண்ணாமலை மாதேரயில்வே ஸ்டேஷன்பாரு
சங்கையற காட்டுபாடி ஜங்ஷனிது இறங்குவாய் நீ
சாரிசாரியாய் வண்டிபாரடி
சர்வ ஜனத்தின் கூட்டம்பாரடி
பேரிக்காய் பலகாரம் பாரடி
பிரியமுள்ளதை வாங்கிக்கொள்ளடி—பெண்ணே
சேலம்லயனில் வண்டி போகுதே
பிகில் கொடுத்து கிளம்பிவிட்டதே. [நன்]

8 மன்னவனே வண்டிநிற்க மரஞ்செடிள் ஓடுவதேன்
இன்னதென்று தோணவில்லை எனக்குரைப்பீர் யிதன்விவரம்
யேதேது தலை கிருகிருக்குது
யெட்டிப்பார்க்க பயமாய் காணுது
நாதனே கைகால் நடுநடுங்குது
நமக்குமுன்னே ஓர் ஊர்தெரியுது—சுவாமி
நத்திவந்த என் சித்தமகிழ
உத்தனைச் சொல்லும் பத்தியாகவே. (நன்)

9 ஆமூரு குடியாத்தம் அரிவையரே ஜோலார்ப்பேட்டை
காமரசமே வாணியம்பாடி கண்டுக்கொள்ளடி சாமல்பட்டி
கருத்தாய் சூரமங்கலம் நேரடி
கணக்கிலடங்கா வண்டிபாரடி
வருத்தமில்லா மோட்டார்காரடி
வாங்குவதை வாங்கி ஏரடி—அடியே
வாலக்குயிலே மகுடஞ்சாவடி
வந்துவிட்டோம் யிரங்கிக்கொள்ளடி. [நன்]

10. சுந்தரம்சேர் என்கணவா தோகையிந்த அதிசயத்தை
உந்தன்தய வாலேக்கண்டேன் உள்ளதெல்லா முறைத்திடுவீர்
ஊருக்குமிதற்கு மெத்தனை தூரம்
ஒங்கி நடந்தால் என்னசாரம்
யேருவதற்கொரு வண்டிபாரும்
யென்ன சீர்டகை கேட்டுவாரும்
யிங்கென்ன கடைதெருவு பாரே
யெந்தனுக்கிதை யெடுத்துரைப்பீரே (நன்)

11. கொங்கணுபுறமே சந்தைகூடுகின்ற தோப்பிதுவே
மங்கையரே தயிர்மோருண்டு தங்கியிளைப்பாரலாமே.
மாம்பழம் வாழைப்பழங்கள் பாரடி
மனதுக்கேற்றதை மங்கையே வாங்கடி
தாம்பூலம்போட்டு பின் வண்டியில் யேரடி
தங்காமல் வந்திட்டோம் யூனியன் கேட்டடி
தையலே பணத்தைத் தந்திடு போகலாம்
தப்பட்டை சத்தத்தை காதார கேட்கலாம். [நன்]

12. அண்டமுக டிடிவதுபோல் அதிர்வெடிகள் கேழ்க்குதெங்கும்
கண்டதில்லை கேட்டதில்லை காதடைக்கு தென்னசெய்வேன்
கணக்கில்லாத வாத்தியம் கேழ்குது
கருதுவெள்ளாண்டி வரிசையாமிது
இணக்கமாய் வண்டி தங்குமேடிது
இரங்கச்சொல்லுரார் என்ன வூரிது. (நன்)

13. சரபங்க நதியினிலே ஸ்தானம்செய்து ஒருமனதாய்
கரங்குவித்து ஓங்காளியை கருத்தில் நினைந்துக் கொள்ளடிநீ
காக்ஷியாம் கண்ட காக்ஷியிதுவே
கண்ணே தெய்வ லோகமிதுவே
மாக்ஷீமை மிகுந்த ஸ்தலமுமிதுவே
மாதே பணிய தருணமிதுவே. (நன்)

## ஒயிர்க்கும்மி.

---

மாசற்றமேனி மதிவதனி எந்தன்
மங்கையே நதியில் ஸ்நானம் செய்து
ஒருமனதாய் நின்று எனைப்போலவே
அனமே பணிவினை தீர்த்திடும் மாதே மோக்ஷிகன் மலர்
[பதமே.

2. தீராவினைகளை தீர்க்கும் தயாபரி
தென்மொழி ஓங்காளியைப் பணிந்து
திருமாதேநீ கரம்கூப்பியே வருவாயெந்தன் பிறகேயிதோ
தேவி பாஞ்சாலியிட கோவிலிதே.

3. வந்த வுரவோரை அழைப்பது போலவே
மாவிலைத் தோரணம் தானசையும்
மாக்ஷிமிகும் தாக்ஷியிலா காக்ஷிகண் காக்ஷியிதே
மாதே சிலிர்க்குதென் திரேக மெல்லாம்.

5. யெங்கெங்கு பார்த்தாலும் சிங்காரமாகிய
யீஞ்சிக் கமுகு கதலியினல்
எராளமாய் ஊருபந்தல் சீராகவே பாருயடி
என்னென்று சொல்லலாம் உன்னிதமே.

6. சத்தியலோகம் கயிலாயம் வைகுந்தமென
சாற்ற வென்றுலது தோற்றிடுமே
சதிராயெங்கும் யிதுபோல அற்புதமே க்ண்டிதமாகுதே
சாற்றமுடியாத நேர்த்தி யிதே.

7. விண்ணுலகிலுள்ள தேவரொன்று கூடி
வேடிக்கை பார்க்கும் விதம் போலே
வீதிப்பல ஜாதிஜெனம் ஒதிப்பணி சேதிதனே
வேண்டிப் பணிகிற வேடிக்கை பார்.

8. அண்டம் வெடித்திட மேளதாளம் பூரி
பம்பை புடுக்கை மணிச்சிலம்பு
ஆத்தாளெதிர் கூத்தாடுரார் பார்த்தால்விழிபூர்த்தே விடும்
ஆனந்த மென்சொல்வேன் அஞ்சுகமே.

9. யெண்ணிலடங்கா ஜனக்கூட்டம் இங்கே
கண்ணுக்கு எட்டிய தூரமட்டும்
யெடமெங்கினும் நடமாடுது மடமாதே கைவிடப்போருய் நீ
யெட்டி நடந்துவா கட்டழகி.

10. போற்றிபணிவார் பலகோடி குரை
சாற்றி துதிப்பார் சதகோடி
பூரித்திட யாரிப்படி கோரித்தொழ பாரிப்படி
பூவையெ நானெங்கும் கண்டதில்லை.

11. பந்தி பந்தியாய் கடைத்தெருவும்
பலகாரங்களும் பழம் பாவையரே
பரிவாய்முதல் சிரியோர்களு பெரியோர்வுண்ணும் திருநாள்
பார்த்ததில்லை யிந்த நேத்திரத்தால். [போலை

12. கோலாகலி திரு சூலி யீன்ரமத
குஞ்சர மாமுகன் றன்னடியை
கோதே மறவாதே வருந்தீதேயரும் சூதேயிலை
கோவிலைச்சுற்றி வலம் வருவோம்.

13. அண்ணாந்து பார்த்தவர் எண்ணுதெல்லாமெண்ணை
அற்புதமான படத்தை ஒட்டி
அணிசித்ர மணிவேலைகள் இணைசொல்லவும் துணியா
அங்கங்கே பாரடி சிங்காரத்தை. [குண்டோ

14. மண்டபம் பாராய் மணிமதிலும் சத்தி
மாதவரும் காரையால் ரிஷபம்
மதிநுட்பமாய் இதைச்செய்தவன் புதுமாதிரி சதவேலையோ
மாதே போகமனம் வல்லையடி.

15. பாவையரே பலிப் பீடமதைத் தொட்டு
பக்தியுடனே சேவித்திடுவாய்
பலவாய்மனம் கலையாமலோர் நிலையாயிதை வலம்செய்திடில்
பத்தியும் புத்தியும் சித்தியாமே.

16. வேத வேதியர் யாகசாலைக்குள்ளே
வேதங்கள் ஓதிடும் வேடிக்கைபார்
விடுவார்குடம் குடமாய்நெய்யை இடமேதிங்கே மடமா
விண்ணுமுள்ள பல வுன்னிதம்பார் [தேவா

17. அன்னதான மடம் பின்னாலே அங்கு
என்ன அதிசயம் பார்த்திடுவோம்—பெண்ணே
அரவோகர அரவென்னுமோர் திருவாசகமுறைகேட்குது
ஆண்டிப்பரதேசி கூட்டமிதே.

18. வேண்டி அன்னமிட ஆண்டிகள் வுண்டுபின்
வீதியில் தேவாரம் ஓதிவர
விண்ணோர்க்கடு கண்ணோர்பட பண்ணேசொலும் உண்ணு
வேதாந்த ஞானிகள் வேடிக்கை பார். [முலே

19. சிந்தை கலையாமல் வந்தோம் வலமாக
சேவிப்பாய் முன்செய்த பாவமரும்
தேனே மடமானே திடநானே சொன்னேனே—அடி
தீர்க்க நமஸ்காரம் செய்யடி நீ.

## தேவாரம்.

முத்தேபவள முழுமணியே முறையோ முரைவுன் திருவடிக்கே
மைத்தாரில்லை நீயல்லால் மாலின் தங்கை மனோன்மணியே
இந்தாயுலகத் துயர்க்கெல்லாம் வினையேயகற்றும் குணநிதியே
சற்றேவுனது மனமிறங்கி தமியேன்றனை நீ ஆளாயோ.

## ஒய்யார நொண்டிச்சிந்து.

1. பாததண்டை கீதமொலிக்க நடந்துவந்த
வர்ணக்கிளியே வனரோஜாவே மின்னற்கொடியே
மிகபுகழ் ரதியே-பாவையே
குந்திசற்றுயாசந் தீருவோம்.

2. யெந்தநரும் சிந்தைக்கினிய ஆசை
மணவாவுலகில் யிணையே சொலயிலா
பணமே செலவுசெய் குணவானெவரோ
எடுத்துரைத்திட வேண்டும் ஏழைமகிழ.

3. பருவதராஜ வமிஷமதிலே வந்த
பக்தர் குலதெய்வ சத்தியாளாகையால்
இத்தனை வைபவம் உத்தமி செய்குறார்
பார்க்கவிழி பூர்க்கும் சேவையார்க்கும் கிடைக்கும்.

4. பக்தரென்ற பட்ட மிவர்க்கு நாதா
எந்தவிதமாய் வந்ததிவற்கு
சந்தேகமறவே முந்தி யுறைத்திடும்
பாவையரிந்திடவே ஆவல் கொண்டேனே.

5. ஆனந்தி வராகியிவளே—தொண்டர்
அல்லும் பகலும் அடிபணிவதினால்
வல்லமியாலே வழங்கிய பெயரே
ஆதியிலிருந்து நல்ல கியாதிபெற்றவர்.

6. ஐஞ்சு பஞ்ச ஸ்தலத்திலும் மாதே
வேண்டியவைபவம் பூண்டவ ரிவரே
மாண்ட பிணத்தையு மாலைய முன்வைத்து
அர்ச்சகர் தீர்த்தமிட அடக்கஞ் செய்குவோர்

7. தெய்வ விசுவாச சீலரே இவரால்
திருவருணைகிரி தீபமு மிடுவோர்
தரும் வல்லாளர்க்கு தலைகட்டும் இந்த
திக்கெட்டும் போற்றும் புகழ் மிக்கபடைத்தோர்.

8. அண்ணமார் பச்சை யாமின்று இந்த
ஆற்றங்கரையில் அனைவருங் கூடி
தோத்திரம் செய்யும் நேர்த்தியைக் கண்ட
அந்தரரும் வந்துநின்று சிந்தை களிப்பார்.

9. ஐந்தூர் ஒன்று கூடியே இங்கு
ஆண்பெண் ணடங்கலும் அணி அணியாகவே
வேண வைபவமாய் விருதுகளுடனே
ஆசாரத்துடன் வரும் விஸ்வாசம் பாரடி.

10. தட்டுதட்டாய் தேங்காய் பழமும் நல்ல
மல்லிகை முல்லை மருவோடு ரோஜா
வில்லையா சூடமா விளக்கோடு வத்தி
வீடுவீடாய் கொண்டுவந்து வேண்டுவதைப்பார்.

11. வானவர் கற்பூரப் புகையால் வந்த
வழிதெரியாமலே வாரி பூமலர்
ஒழிவிலா தூவி ஓய்ந்தனர் கையும்
வருந்திப் பூசாரிகளும் வர்ணிக்கின்றாரே.

12. நல்லான சிந்தையினாலும்—வேண்டிக்
கதரிப்பதரி கத்திடத் தெய்வம்
பூதல்வரைக் கார்க்க பூரண மனதாய்
ககனத்தில் மின்னல்போலே காக்ஷி தந்ததே.

13. கண்கண்ட தெய்வமிதுவே இந்த
கலியிலும் மக்களை கார்க்குறே னென்று
ஒளிவதைக் காட்டி வுடனே மறைந்த
காக்ஷிபோல் கண்டதில்லை காமரசமே.

14 ஆதிசேஷ னாலுமிதையே சொல்ல
அருமையதென்றால் ஆகுமோ என்னால்
பெருமையை கண்டு பேசவும் போமோ
ஆற்றில் இடமில்லை ஜனம் கோர்த்திருக்குதே.

15. வீடுபோக விடிந்து போகுமோ—பெண்ணே
விலகியேபோக வீதியிலெடமில்லை
குலதெய்வமதை கைகூப்பி நீதொழுவாய்
விபூதி பிரசாதம்பெற்றால் வினையொழிந்திடும்.

16. மூவர்முதல் தேவர் யாவரும் சொந்தப்
பதிதனை விட்டு
பாரிலுமிப்படி துதியுண்டோவென்று தோகையருடனே
பார்த்தவண்ணமாக விழி பூர்த்து நின்றாரே.

# கும்மி.

1. கும்மியடிப் பெண்கள் கும்மியடி யிரு
கொங்கைக் குலுங்கவே கும்மியடி
நம்மையாள் தொந்திவிநாயகனைப் போற்றி
நங்கையே வாராய் நீ இங்கிதமாய்.

2. மாந்துளிர்மேனி மதிவதனா இந்த
மங்கைக்கரசியை யழைத்ததென்ன
சாந்தமுடனதை ஓதிடுவீர் வல்ல
சர்ச்ஜனர் போற்றும் குணவானே.

3. யெங்கும் கெடிகொள் யிடைசைநகர் வாழும்
யேக பராபரி முக்கண்ணியாம்
அங்காள யீஸ்வரிக்கி கும்பாபிஷேகமாம்
அன்னமே போகலாம் வுன்னிதமாய்

4. மின்னர்க்கொடி யிடைமாதேயிது போல
மேதினியி லெங்கும் கண்டதில்லை
என்ன சிங்காரம என்ன ஒய்யாரம்
என்னென்று சொல்லலாம் உன்னிதமே.

5. பக்த ரென்றதர்க் கையமில்லை இவரை
உத்தம ரென்பதில் குற்றமில்லை
இத்தனை வைபவம் உம்மாலே யான்கண்டு
சித்த மகிழ்ந்தேனே மன்னவனே.

6. கோகிலமே நாமும் மெள்ள மெள்ள சென்று
கோவிலை போய் சேர்வோம் பாவையரே
யேகஜனக் கூட்டம் யேமாந்தால் நம்மாலே
யேகமுடியாது பூவையரே.

7. இந்தவிதமாக யெத்தனை நாளைக்கு
சிந்தனை செய்குவா மன்னவனே
அந்த விபரத்தை எந்தனுடன் சொல்லும்
சந்தேகந் தீரவே சுந்தரனே.

8. அண்ணமார் வுற்சவம் மூன்று நாளாம் பின்பு
அம்பிகை கும்பாபி ஷேகமதாம்
புண்ணியம் செய்தவர்க்கல்லோ இடைத்திடும்
மண்ணிலரிதடி மாதரசே.

9. பட்டக்கார துரை வாருராம் ஜெனம்
கட்டா யெதிர்சென் றழைக்கப்போருர்
திட்டமா யாரவர் பேரும் ஊரும் நன்ருய்
தெரியச் சொல்லுமென் மன்னவனே.

10. பர்வதராஜ வம்மிஷமே இந்த
பத்தாதிக் கெல்லா மதிகாரி
தற்செயலா எந்த குத்தமென்ருலிவர்
தண்டிக்க வல்லவர் தானறிவாய்.

11. பூணயே கோனகபாடியடி தந்தை
பூஞ்சி பத்ததரவரீன்ற சுதன்
சேவைக்கரிதான ரங்க பத்தரென்ற
சிங்கமடி வல்ல தங்கமடி.

12. அந்த நாளில் செய்த ராஜரீகம் போல
இந்த நாளிலிவர்தான் தீர்த்தும்
சிந்தை கலங்காமல் யேழை ஜெனங்களை
சீர்பெற செய்யும் குணவாண்டி.

13. தீரு வழக்கெல்லாம் தீர்ப்பவருமிவர்
தேவ அமிஸமாய் ஜெனித்தவராம்
மாருவழகன் பரியேரி வூர்வல
மாக வருவதை பாருயடி.

14. கொம்பு தப்பட்டையும் தான்முழங்க யாரும்
கூப்பி தொழுதிட மாப்பிள்ளை போல்
சம்பரமுடன் வலம் வந்து வீடுதியில்
தானமர்ந்திட்டதை பாருயடி.

15. வேதப் பருயணம் ஓதுவதும் யிங்கு
வேள்வியும் யாகம் நடத்துவதும்
ஓதமுடியுமோ மாதரசே கண்டோர்
வுள்ள பூரிக்குமே வள்ளலுக்கும்.

16. அஷ்ட திக்கிற்கும் கலசங்களை வைத்து
அந்தணர் மந்திரம் தானோதி
தட்டுடன் தாம்பூலம் தட்சணை வேஷ்டியும்
தான் பெற்று போறதை பாருயடி.

17 காய்ந்த சடைமுடிக் கெண்ணைவிட்டு பணம்
காசி வேஷ்டிகளை தான் வாங்கி
ஓய்ந்திடாமல் தேவாரங்களை சொல்லி
ஆரை சுத்தி வாருர் பாருயடி.

18. தானத்திலே அன்ன தானமென்பார் அந்த
தானத்தின் மேலே நிதானமென்பார்
மானே அவரவர்க்கேற்ற விதமாக
மங்கையே செய்குர யிங்கிதம் பார்.

19. இரவும் பகலும் ஓய்யாமல் இவர்
சிறமத்தை யெண்ணியே பாருமல்
பரங்களுக்கிட்டால் போதுமென்று யிவர்
பரிந்து செய்வதை பாரடி நீ.

20. ஊருக்கு நாலுபேர் காரியதரிசியை
தேறியெடுத்து யிதர்க் கென்றே
மாறுபடாதவர் யுக்திபடி யிந்த
மார்க்கம் நடத்துருர் மாதரசே

21. காசிபண மென்று எண்ணுமலவர்
ஆசையுள்ள தெல்லாம் தான் முடித்தார்
மாசிலாதெங்கும் நான் கண்டதில்லை சொல்ல
கூசுதடி எந்தன் கோதையரே.

925:417
N74
181823

22. யெந்த வேலைக்கினி போகாமலிதை
சொந்த வேலை என தான் முடித்து
அந்தந்த வூருரும் வந்து நின்று செய்த
விந்தை என் சொல்லுவேன் சுந்தரியே.

23. யெடுத்துச் சொல்ல வாய் போதாது இதை
யேட்டில் யெழுத முடியாது
கடுத்தொரு வார்த்தையும் சொல்லாமல் கை
கட்டி நடந்திடும் திட்டம் பாரும்.

24. போட்டதை தின்ன முடியாமல் சாதம்
மூட்டை கட்டிக்கொண்டு போவாரும்
கேட்டதெல்லாம் தந்தார் புண்ணியவான் என்.
கூட்டமாய் பேசுறார் பார்க்கிலையோ.

25. அன்னமிட்டாலும் மனம் வேணும் வாரி
சொர்ன மிறைத்தாலும் குணம் வேணும்
இன்னும் சிலவு வந்தாலும் வறட்டென்று
பன்னிப் பேசுவதை பார்க்கிலையோ.

26. காட்டுக்கத்தது கொங்கருயர்க் கென்று
நானிலம் சொல்லும் பழமொழி போல்
தாட்டீக மன்னன் வருவாறென்று வழி
தான் பார்த்து வாடுரார் தையலரே.

27. இத்தனை வைபவம் தன்னிலவர் வந்து
ஒத்திருந்தா லதை என்ன சொல்வேன்
கர்த்தன் சேவைக்கெதிர் பார்க்கும தேவர்போல
வைத்து வணங்குவார் வஞ்சியரே.

28. கொங்கராய னென்றால் யாரவரோ அவர்
இங்குவருவ ததெதற் கரியேன்
மங்கை யரிந்திட ஆவல்கொண்டேன் அதை
சங்கையாச் சொல்லும் இங்கிதமாய்.

29. ராஜகோ லாகலன் பக்தரென்றால் வெகு
ஆசையும் அன்புடன் பாராட்டி
வாசமான எந்த காரிய மானாலும்
வந்து தீர வேண்டும் சுந்திரமே.

30. பக்தர் போனவழி தான்போவார் அவர்
சித்தம்போல் தானும் சரியென்பார்
இத்தரையி லிந்த உத்தம வானைப்போல்
யெங்கும் கண்ட தில்லை மங்கையரே.

31. ஆதிமுத லதிகாரியடி இந்த
ஜாதியர்க்கே வுப காரியடி
நீதிவழுவா மன்னவனை சதா
நினைந்துக் கும்மி யடியுங்கடி.

32. கண்ணுக்கெதிராக காட்ட வேணும் எங்கள்
காதல் தீரப்பாதம் போற்ற வேணும்
வணமில்லாமலே யாரைத் தொழுவது
வுண்மையைக் கூறுமென் மன்னவனே.

33. தண்டு தளங்களைக் கூட்டிடவும் சொந்த
பெண்டு பிள்ளையோடு வந்திடவும்
மண்டலம் தன்னிலே நாளில்லை என்றவர்
மயங்கி நின்றாராம் மாதரசே.

34. ஆசையெல்லாம் வெகு மோசமாச்சி அந்த
அப்பன் தெரிசனை யெப்போ நேரும்
தேசிகனே மற்றதெல்லாம் எனக்கு நீ
தெரியச் சொல்லுமென் மன்னவனே.

35. எங்கெங்கு பார்த்தாலும் தீவட்டியாம் இந்த
எத்தனை யென்று எடுத்துரைப்பேன்
சங்கரியாளை சிங்கமே லேத்தியே
இங்கிதமாய் வாரா ரென்னசொல்வேன்.

36. ஓண்டி கிற்கப்பய மாகுதடி இதை
கண்டுபோக மனம் வல்லேயடி
அண்டம் வெடித்திட பாண மத்தாப்புகள்
தொண்டர் விடுவதென் சொல்வேனடி.

37. மேளதாளம் பூரி நாகசுரம் அண்ட
கோளம் கிழிபட ஊதுவதும்
நாளேக்கிடைப்ப தரிதென யாவரும்
தாளடி போற்றுரர் பாருங்கடி.

38 ஆனந்தி அங்காளி ஊர்வலம் வந்துபின்
ஆலயம் தன்னி லமரு முன்னே
ஞான கிருபாகரியாளே வூஞ்சலாட்டி
நாடிப் பணியுரர் பாருங்கடி.

39. வந்தவுற வோர்க்கு மாலேபூ சந்தணம்
வைந்துப் பிரசாதம் வழங்கியபின்
சிந்தை களித்து அவரவர் தன்மனே
பைந்தொடியே போருர் பாரடிநீ.

40. நாட்டிலுள்ள சிவ பக்தரெல்லாம் இந்த
நாலேந்து நாளாக தாயார்க்கு
கேட்டதெல்லாம் தந்து கிரேகசிரமம் பட்ட
கீர்த்தி என்சொல்லுவேன் கிளிமொழியே.

41. பார்த்தேனே விழி பூர்த்தேனே இந்த
பாடுபட யாரா லாகுமடி
யேர்த்தவரை கொஞ்சம் நானு முழைத்திட்டேன்
யென்னுலான திதுதானே.

42. உன்னுளான வுபகார மென்னு நீரும்
அன்னே வுமையாட்கு செய்தஏதன்ன
பெண்ணுளரியவே சொன்னுல் விடுகுவேன்
யென்னேடே வாதென்னு மன்னவனே.

43. பத்தும் பதிகம் பாடினேன் அண்ணன்மார்
பச்சைமுதல் பல உற்சவத்தை
சற்றும் விடாமல் பதம்பாடி யார்க்கும்
விஸ்தார மாக்கினேன் உத்தமியே.

44. நூற்றுக்கணக்காய் பணம் கொடுத்தும் திரேகம்
வேர்க்கும் படியாக வேலை செய்தார்
யேற்ற கஷ்டத்திற்குமேல் என்ன கஷ்டமிது
யெனக் குறைத்திடும் மன்னவனே.

45. கற்றபெருமை கற்றோ ரறிவார் பின்னும்
மற்றோ ரறிவரோ மாமயிலே
சற்றும் இதற்கீடு வுற்ற வுலகினில்
சாற்ற முடியுமோ சற்குணியே.

46. பன்னிவெகு பாடுபட்டே னென்றாய் உமக்
கென்ன பரிசவர் யீந்திடுவார்
நன்னயமாயதை கன்னி யறிந்திட
இன்னதென் றோதுமென் மன்னவனே.

47. பட்டு பட்டாவளி வேஷ்டிகளும் நல்ல
பட்டணத் தூரஞ்சி குட்டைகளும்
மட்டுப்படா சால்வை கைக்கணையாழியும்
மங்கையே தருவார் பாரடி நீ

48. வேணச் செலவிதில் என்னசெய்வோம் பின்னால்
வேண்டியதைத் தாரோமென் றுரைத்தா
நாணமடைந்திட நேரும் வீணாசையேன்
ஞாயமறிந்த என் மன்னவனே.

49. ஆசைக்கிசைந்த ஆணரங்கே கண்ட
அற்புதம் சொன்னாலே ஒப்புவரோ
நேசர்மகிழ அடையாளம் காட்டினால்
நிச்சயமென்று நினைப்பாரடி.

50. யெத்தனை பேர்க்கிவர் யென்னென்னமேர் செய்தார்
யெந்தனுக்கு செய்ய சந்தேகமோ
சற்றும் வேறெண்ணாதே உத்தமியே பெற்று
சந்தோஷமாய் போவோம் பைந்தொடியே

51 நாளாச்சு வந்து நேசர்களை கண்டு
நாதா விடைபெற்று வந்திடுவீர்
தாளாமல் ஊர்போக நாடுது என்மனம்
தங்காமல் வந்திடும் மங்களமாய்.

52. பாடிப்படித்தவர் தான்வாழி இதை
பாடும்படி சொன்னோர் தான்வாழி
தேடி யச்சிலிட்டு எங்கும் பரவிட
செய்தவர் யென்றூளும் வாழியவே.

53. நித்த மிடசநகர் வாழி போங்கும்
சத்தியங்காளி வுமை வாழி
தத்துவ குலமும் தான்வாழி எங்கும்
பக்தரென்ற புகழோர் வாழி.

54. தாண்டவராய ருமை வாழி எங்கள்
ஆண்டவன் வேலன் கணன் வாழி
வேண்டுமடி யவர் தான்வாழி நிடதை
வேந்தண் பருவதன் வாழியவே.

55. தாசன் குமரச்சாமி வாழி சொல்லும்
தண்டமிழ் பதிகம் தான்வாழி
நேசமிகும் நண்பர் வாசவன் போலவே
நீடூழியா யென்றும் வாழியவே.

ஸ்ரீ கணபதி துணை.

# ஸ்ரீ பர்வதராஜ வம்ச சிகாமணிகளுக்கோர் விஞ்ஞாபனம்.

சராசரம் படைத்த நிருமய நளித்த புராதனமான தருதல மீதில் தாயகமொத்த நேயர்களே! சற்றே கவனிப்பீர். அதாவது —முன்கூறிய ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி ஜதீகப்பதிகத்தினால் உமக்கு நன்கு விளங்கியதென்னே? அரிகிலேன் திருப்பாற் கடலில் பிறந்த லட்சுமியை ஸ்ரீ மகாவிஷ்ணு கூடி மருகுமாமுனி பிறந்தார் அவருக்குக் குபேரன் மகள் சவுலாங்கனியை திக்ரு கலியாணம் செய்ய அவள் வயிற்றில் ஸ்ரீ பர்வதராஜன் பிறந்தார். அவருக்கு வருணராஜன் மகள் மேனுவதியைக் கலியாணம் செய்ய அவள் வயிற்றில் ஸ்ரீ பார்வதியும், மைநாகனும் பிறந்தார்கள். மைநாகனுக்கு சௌமன்னியாரிஷி மகள் ஷண்பகாவதியை கலியாணம செய்ய அவள் வயிற்றில் 96 பிள்ளைகள் பிறந்தனவென்று விளங்கலாயிற்று. இத்தகையாய்ப் பிறந்தோர்களின் சந்ததியாகிய நாம், நம் முதியோர்களின் பெயரை விளக்காது கண்மூடித்தனமாய் நம்மிடம் பெண்கொண்ட சம்மந்திபேரை விளக்கியும், நமது தந்தை பேரை மழுங்கச் செய்வது மதியீனமே. இஃது எவ்வாறெனில.—ஸ்ரீ பர்வதராஜன் குமாரத்தியை யல்லவா ஈஸ்வரன் மணமுடிக்கார். பருவதன் நமக்கு மூதாதையல்லவா? அவருக்கும் நமக்கும் மூல புருஷஉ திருமாலல்லவா? ஆகையால் பருவதராஜ வமிசத்தவர் யாவருக்கும் திருமால்கோத்திரம், மருகுமாமுனி சூத்திரம்; தத்துவம் பிரணவாதி. ஆகையால் ஏனையோர்கள் யாவரும் கலியாண சடங்கு காலத்தில் சிவகோத்திரம என்று சொல்வது வீண் வார்த்தையே. நிற்க, இனியாவது தயவு செய்து யாவரும் திருமால் கோத்திரம், மருகுமாமுனி சூத்திரம் என்று புரோகிதற்கு கற்றுய்ந் துரைக்க வல்லார் சொல்லி திருப்புமாறு மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தவிர ஸ்ரீ பர்வதராஜ வமிசத்தவர் பெருமை பேரெனும் வாரியாயினும, மீனமாரிஷியின் சாபத்தால் முனை மழுங்கி, முன்

னேற்றமடையாமல் நின்றது. காரணம் யாதெனில் நாகரீகம் குறைவுபட்டதே. ஒவ்வொருவரும் உள்ளநாளும் உறங்கிக்கிடந்தால் எப்போதுதான் முன்வருவதென்பது தோன்றவில்லை.

## வெண்பா.

மங்கையர்கள் யோனிமிசை வைத்திருக்கும் ஆசைதனை
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்து—கங்கை
மதிவேணியரன் பாதார விந்தமதில் வைத்தாக்கால்
காணலாம் காணுக்கதி.

என்றபடி, பர்வதகுல பக்தர்களே !

உள்ள நாளும் ஒருஜான் கும்பிக்கே ஓயாத பாடுபட நேரினும்; தயவோடு வெள்ளி, திங்கள் போன்ற இரண்டு நாளும் மிக்க சுத்த சிஸ்மாய் ஸ்நானபானம் செய்து, மது மாமிசங்களை விலக்கி ஏக மனதாய் நம்மை கோடி தலமுறைவரை கார்த்து ரக்ஷிப்பதாய் வந்த ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அபீதகுஜாம்பாள் அங்காளபரமேஸ்வரியை, பெண்டுகளும், புருஷர்களும் வந்து வணங்கி, பின்னர் அவரவர்களுக்குற்ற தொழிலை நடத்தி களிப்பெய்து வருவது என்ன பெரும் கஷ்டமோ? மேலும் தொண்ணூற்தொண்பது பங்கு உமது குடும்பத்திற்கென மனதை செலுத்துங்கள். ஒரு பங்கு இந்த அம்பாளை கவனிக்கப்படாதா ? புருஷ சிங்கமாகிய நீர் இத்தகை அபிமானத்தை மேற்கொளாமையாலல்லவா பெண்டுகளும் இதை கனவிலும் நினை[illegible]. [illegible]வை திருவள்ளுவ நாயனூர் கூறிய கொறள். (பழக்கம் பெரியது பார் பாரையிலும் கோழி கிழிக்கும்) என்றபடி; நம்முடைய பழக்கமல்லவா நமது பின்பற்றிய பாலருக்கும் இழிவைக்காட்டுகின்றது. அப்படி இழியாவண்ணம், தெய்வபக்தி சீலம்குறைவுபடாது நாம் யாவரும் ஒற்றுமையுடன் இருந்து; நம் குலதெய்வமாகிய ஸ்ரீ அபீத குஜாம்பாள் அங்காள பரமேஸ்வரியைப் பணிந்து நம்ம ஜாதி [illegible] விருத்தி செய்ய வேண்டுமாய் மிகவும் வினயத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரா. வீ. குமாரசாமி நாட்டார்.

181823
600 008

